தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 6 Special Issue: 02 December 2025
DOI: https://doi.org/10.63300/tm060225

# Customs Of Ancient Tamils From Today's Perspective

**D. Sumathi[1],**
Ph.D. Research Scholar of Tamil, Reg. No. PUAJ230360827, Kandaswami Kandar's College, Namakkal, Affiliated to Periyar University, Tamil Nadu, India.
ORCID : https://orcid.org/0009-0004-3185-7952 EMail: sumathijaivarsha@gmail.com
**Dr. R. Vimalraj[2],**
Associate Professor of Tamil,Kandaswami kandar' s college,Namakkal,
Affiliated to Periyar University, TamilNadu, India.
ORCID : https://orcid.org/0000-0002-7049-8145

**Abstract:**

The lifestyle and customs of Ancient Tamils are intertwined. Through literature, Tolkappiyam inscriptions and archaeological discoveries, the Tamil lifestyle, food habits, social norms, clothing family organizations, cultural festivals and other customs are clearly visible. This study examines whether those traditional practices are being maintained and given importance in the contemporary urban environment

The customes of Ancient times have gradually started to disappear in the name of civilization. The benefits of joint family life, thoughts on the decline in attention to natural food, the decline in interest in cultural clothes and traditional jewellery among the people, the decline in awareness of the rituals of festivals, etc. Are being affected by urbanization in the name of civilization, but today we see those rebirth in many places. The combination of antiquity and modernity help us to know our cultural identities again.

This essay examines the grammatical evidence that underpins ancient customs and practices and shows how thes are relevant to today's young generation. It also attempts to reveal the value of mythology and it's modern uses.

References:

1. Aananthi K.Y. Sangakala Nadanathin Valithonralil Nadupuraviyalil Aadarkalaikal ,Thamilmanam Sarvathesa Thamil Aayvithal Vol -2,issue -01, 2025
2. Dr.S.Aathinarayanasamy Ara ilakiyankalil Pazhanthamilar Panpadum Pazhakavalankalum Puiam pannadu thamizhiyal Ayvithal Vol-2, issue-4, 2022
3. R. Aravindan perumpanattarupadai, New Century Book House, 41 Bay citco Industrial Estate Ambattur Chennai 600 050
4. Dr. Thiruganasambantham tholkappiyam, seyyiliyallathikaram, Kathir Publishing House, 93, South Road Thiruvaiyaru 613204
5. Dr. Dakshinamurthy, Paripadal New century book house(p)Lit 41B Citco Industrial Estate Ambathur Chennai 600 008
6. Avvai Duraisamy pizhai Purananuru, Tirunelveli South India saiva manufacturing Corporation Ltd, 522,TTK Road, Alwarpet, Chennai 18
7. Gnajothi K. Thamilarkalin Vizhakal MJSSH Online Journal , Vol-5, issue -3, 2021
8. Puliyurkesikan Paripadal Jeeva pathipakam 21,Abdulla shakip second street, Seppakkam, Chennai 600 005
9. Puliyurkesikan AgananuruAshwin agency 67,Ashdalakshmi nagar Chennai 600 116
10. V.M. Sadagoparamanajachariyar, S. Krishamacharyar, Saraswathiyandathi Kambanattazhwar Ganesha Achukudam, Chennai.
11. Dr. P. Subramanian paripadal New Century Book House (p)Lit, 41 B Cictco Industrial Estate, Ambattur Chennai 600 098
12. Dr. Thiruvana Sambandham tholkappiyam Porulathikaram Kadir publishing house 93, South Road Thiruvaiyaru 613204

**Keywords** : *Mythology, Customs, Civilization, Culture, Tradition, Belief.*

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# தொன்மகாலத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள் இன்றையப் பார்வையில்

[1]**து.சுமதி,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவுஎண் PUAJ230360827, கந்தசாமிக் கண்டர் கல்லூரி நாமக்கல், பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. தமிழ்நாடு, இந்தியா.

[2]**முனைவர் இர.விமல்ராஜ்,** இணைப் பேராசிரியர் தமிழ்த் துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி நாமக்கல், பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம் (Abstract)**

தொன்மக் காலத் தமிழர்களின் வாழ்வியல் பழக்க வழக்கங்களைச் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் கண்டுபிடிப்புகள் ஆகியவைகளின் மூலம் தமிழர் வாழ்வியல் முறை, உணவு பழக்க வழக்கங்கள், சமூக ஒழுக்கங்கள், ஆடை அலங்காரம், குடும்ப அமைப்புகள், கலாச்சார விழாக்கள் உள்ளிட்ட பழக்க வழக்கங்கள் வெளிப்படையாக காணப்படுகின்றன. இந்த ஆய்வின் மூலம் இக்கால நகர சூழ்நிலையில் அந்த மரபு முறைகளைத் தவிர்க்காமல் முக்கியத்துவம் கொடுத்து நிலைநாட்டி கொண்டிருக்கின்றன என்பதை ஆராயப்படுகிறது.

பழங்காலத்தில் இருந்த பழக்க வழக்கங்கள் நாளடைவில் நாகரிகம் என்ற பெயரில் அழியத் தொடங்கியது. கூட்டுக் குடும்ப வாழ்வின் நன்மைகள், சிந்தனைகள், இயற்கை உணவுகளின் மீது கவனம் குறைதல், கலாச்சார ஆடைகள் மற்றும் பாரம்பரிய நகைகள் மீதான விருப்பங்கள் மக்களிடையே குறைந்து வருதல், திருவிழாக்களின் வழிபாட்டு முறைகளின் மீதான உணர்வு குறைதல் போன்றவை இன்று நாகரிகம் என்னும் பெயரில் நகரமயமாதலால் பாதிக்கப்படுகின்றது. இன்று பல இடங்களில் இவைகள் மீள்பிறப்பு பெறுவதைக் காண்கிறோம். தொன்மமும் நவீனமும் ஒன்று சேர்ந்து நம் பண்பாட்டு அடையாளங்களை மீண்டும் நமக்கு அறிய உதவுகின்றது.

இந்த ஆய்வு தொன்மகால பழக்கவழக்கங்கள்,கலாச்சார பழக்கங்களை இலக்கிய இலக்கணச் சான்றுகள் மூலம் ஆராய்ந்து அவை எவ்வாறு இன்றைய இளம் சமூக தலைமுறையினருக்கு பொருந்தக்கூடியவை என்பதை காட்டுகிறது.மேலும் தொன்மத்தின் மதிப்பையும் அதன் நவீன பயன்பாட்டையும் வெளிக்கொணர முயற்சிக்கிறது.

**குறிப்புச்சொற்கள்:** தொன்மம், பழக்கவழக்கம், ஒழுக்கம், நாகரிகம், கலாச்சாரம், பண்பாடு, நம்பிக்கை.

## முன்னுரை

தமிழர்களின் மொழியான தமிழ் மொழி உலகின் தொன்மையான மொழியாகும். தமிழ் இன மக்கள் தொன்மையான மொழி, குடும்ப அமைப்பு மற்றும் கலாச்சாரம், நாகரிகத்தைக் கொண்ட பெருமைமிக்க சமூகமாகும். சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் ஆய்வுகள் போன்றவை தொன்மக்கால தமிழர்களின் வாழ்வியல் முறைகள், கலாச்சாரம், பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய செய்திகளை நமக்கு தருகின்றன. பழங்கால தமிழர்கள் இயற்கையோடு இணைந்து நெருக்கமாக வாழ்ந்தார்கள். அவர்களின் உணவு பழக்கவழக்கங்கள், உடைஅணிந்த முறை, வீட்டு வாழ்க்கை, கலைகள், திருவிழாக்கள், சமூக நம்பிக்கைகள் ஆகியவை தனித்துவம் மிக்கவையாக காணப்பட்டன.

இன்றைய நிகழ் காலத்தில் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக நகரமயமாதல் மற்றும் உலகமயமாதல் ஆகியவை மக்கள் வாழ்க்கையில் பெருமளவில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன.

இருந்தாலும் பழமையைக் கடந்து வந்து நாகரிகம் என்ற பெயரில் வாழ்ந்தாலும் இன்னும் சில பழக்க வழக்கங்கள் நம் சமூகத்தில் நிலையான இடத்தைப் பெறுகிறது. தொன்மகால தமிழர்களின் பழக்க வழக்கங்களை இன்றைய பார்வையில் புரிந்து கொள்வது நம்முடைய பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தையும் அதனைப் பின்பற்றி தொடரும் அவசியத்தையும் இன்றைய இளம் சமூக தலை முறையினருக்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும் என்பது இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**தொன்மம் சொல் விளக்கம்**

. தொன்மம் என்ற சொல்லுக்கு பழமை, பழைய வரலாறு, புராணம் கோரும் செய்திகளை வலியுறுத்தி காட்டும் கதைகள் என்று சொல்லப்பட்டு வருகின்றன. ஒரு சமுதாயத்தால் நம்பப்படும் உண்மை நிகழ்வு கதைகள், நாட்டுப்புறம் சார்ந்த கதைகள் செவி வழியாக காலம் காலமாக நம் முன்னோர்கள் கூறிய கதைகளின் தொகுப்பே தொன்மம். முதன்மை இலக்கண நூலான தொல்காப்பிய செய்யுளியலில்

**“தொன்மை தானே சொல்லுங் காலை**

**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே”**

**(தொல். செய்யுளியல்.. நூற்பா. 538)**

ஆய்வுக்குரிய அடிப்படை நூல்களாக பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை,

1. தொல்காப்பியம்
2. சங்க இலக்கியம் (எட்டுத்தொகை பத்துப்பாட்டு)
3. காலம் தோறும் தமிழர் கலைகள்

தொன்மை கால தமிழர்களின் பழக்கவழக்கங்கள் என்னும் இந்த ஆய்வேடு கீழ்காணும் ஐந்து பெரும் தலைப்புகளில் அமைக்க பெற்றுள்ளன.

1. வாழ்வியல் அமைப்பு முறைகள் மற்றும் உழவுத் தொழில்
2. உணவும் விருந்தோம்பலும்
3. கலைகள்
4. திருவிழாக்கள்
5. ஆடை அணிகலன்கள்

வாழ்வியல் அமைப்பு முறைகள் மற்றும் உழவுத் தொழிலில் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததையும் நிலம் நீரின் சிறப்பையும் இலக்கிய நூல்களின் சான்றுகளோடு கூறப்பட்டுள்ளது.

உணவும் விருந்தோம்பலும் என்னும் இரண்டாம் தலைப்பில் நெருப்பின் முக்கியத்துவம் உணவை சமைத்து சாப்பிடும் வழக்கம் மக்கள் மன்னர்களின் உணவு முறை விருந்தோம்பலின் சிறப்பையும் இலக்கண இலக்கிய நூலின் சான்றோடு கூறப்பட்டுள்ளது.

கலைகள் கலாச்சாரத்தில் கலையின் சிறப்புகளையும் கலைஞர்கள் வாழ்ந்த பகுதியையும் சங்க இலக்கிய நூலின் மூலம் அறிதல்.

நான்காம் மற்றும் ஐந்தாம் தலைப்பில் திருவிழாக்கள் ஆடை அணிகலன்களின் சிறப்புகளையும் அவற்றை எக்காலத்திலும் பயன்படுத்துகிறோம் என்றும் கூறப்பட்டுள்ளது.

**தொன்மக் கால தமிழர்களின் வாழ்வியல் அமைப்பு முறைகள் மற்றும் உழவுத் தொழில்**

பழங்காலத் தமிழ்ச் சமூகத்தை இன்றைய நவீனமயமான சூழ்நிலைகளில் நாம் பார்க்கும் அமைப்புகளில் இருந்து மிகவும் மாறுபட்டவையாக இருக்கிறது. அக்காலத்தில் தமிழர்கள் இயற்கையோடும், ஒழுக்க நெறிகளோடும், சமூக ஒற்றுமையோடும் இணைந்து வாழ்ந்தனர். தொன்மக்கால தமிழர்களின் வாழ்வியலை அறிந்து கொள்வதற்கான முக்கிய ஆதாரங்களாக சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் மற்றும் தொல்லியல் ஆய்வுகள் இருக்கின்றன.

சங்க இலக்கிய நூல்களில் புறநானூறு பகுதியில் நீரும் நிலமும் பகுதியில் நீர் மற்றும் நிலத்தின் சிறப்பினைப் பற்றியும் பரிபாடலில் உணவு முறைகளைப் பற்றியும் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளனர்

**"உணவெனப்படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திினோரே**
**வித்திவான் நோக்கும் புன்புலம்கண்ணகன்**
**வைப்பிற்று ஆயினும் நண்ணிஆளும் "(புற-21-25)**

நீர்மையின்றி வாழாது உடல். அது உடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவரும் ஆவார். நீரையும் நிலத்தையும் ஒன்று கூட்டி வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலை நிறுத்தி வாழ்வித்தவராவார். புன்செய் நிலம் இடமகன்றும் விளையுள் பெருக்காமையினால் பயனற்றதாகும் என்று விளக்குகிறது இப்பாடல் வரிகள்.

**உணவும் விருந்தோம்பலும்**

சங்ககாலத்தில் மனிதன் காய்கறிகள், பழங்கள், கிழங்குகள், விலங்குகளின் இறைச்சி இவற்றை உண்டு வாழ்ந்து வந்தனர். நெருப்பின் உபயோகம் இல்லாத போது அதை அப்படியே சாப்பிட்டார்கள். நெருப்பின் உபயோகம் அறிந்தபின் உணவைச் சமைத்து சாப்பிட ஆரம்பித்தனர். மக்கள் தாங்கள் வாழும் நிலத்தின் தட்பவெப்ப நிலை அங்கு நிலவும் சூழ்நிலை ஆகியவற்றை பொறுத்து ஒரு நாட்டு மக்களின் உணவு பழக்க வழக்கம் அமைகிறது. பழங்காலத்தில் மக்களின் உணவு முறையானது அவரவர் வசதிக்கேற்ப மாறுபடுகின்றன..

பரிபாடலில் மக்களின் உணவு முறைகளைப் பற்றிக் கூறுவதைக் காண முடிகிறது. சங்க இலக்கியங்களில் மக்கள் பிறருக்குப் பகுத்து உண்ணும் மாண்பினை பெற்றிருந்தனர். மதுரை மக்களின் உணவு முறை போல் மன்னர்களும் உண்டனர் என்பதை அறிய முடிகிறது.

வேரும் தூரும் காயும் கிழங்கையும் பூரிய மக்கள் உண்ணும் கள் முதலியவற்றையும் வையை ஆறு இழுத்துச் சென்றது இதனை

**"வேரும் தூரும் காயும் கிழங்கும்**
**பூரிய மாக்களுண்பதுமண்டி"(பரி- பா-47-48)**

என்று கூறுவதில் இருந்து பூரிய மக்கள் கள்ளுண்டனர் என்பதை காண முடிகின்றது. மேலும் மன்னர்களும் செல்வர்களும் கள் குடித்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

இன்றைய நவீன நாகரிக உலகில் மக்கள் உடலுக்கு கேடு விளைவிக்க கூடிய மது, துரித உணவுகளை நாடி செல்கின்றனர். அத்துரித உணவுகள் மனித உடலுக்கு கேடு விளைவிக்கின்றது.

**விருந்தோம்பல்**

பழங்காலத்தில் மக்கள் அவர்களை நாடிவரும் விருந்தினரை இன் முகத்தோடும், புன் சிரிப்போடும் வரவேற்று உபசரித்து இல் வாழ்க்கையினை மிகச்சிறப்போடு பண்பாட்டாக போற்றி வளர்த்தனர். பழந்தமிழ் இலக்கியம் விருந்தோம்பலை மிகச் சிறப்பாக கூறுகின்றது

**“விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்னகிழ வோள்மாண்பு” (தொல் . பொருள்1102)**

**“விருந்தோம்பல் தமிழரின் சிறந்த பண்பாடு விருந்தினர் என்பவர் முன்பின் அறியாத புதியவர்கள் எந்நாட்டினராயினும், எம்மொழியினராயினும் நட்புக்கொள்ளும் எண்ணத்துடன் வீடுதேடி வருவார்களாயின் அவர்களை வரவேற்பவர்கள் தமிழர்கள் விருந்தினரை வரவேற்று உபசரிப்பவர்கள் தாம் மறுமை இன்பத்தை பெற முடியும் என்ற நம்பிக்கை தமிழரிடம் குடி கொண்டிருந்தது”. (முனைவர் ச.ஆதிநாராயணசாமி பக்-22 -23)**

என்று மனையாளுக் குரிய மாண்புகளுள் ஒன்றான விருந்தோம்பல் பற்றி கூறுகின்றது.

**கலை கலாச்சாரம் மற்றும் விழாக்கள்**

சங்ககால தமிழர்கள் கலை கலாச்சாரம் மற்றும் விழாக்கள் போன்றவற்றை பெரிதும் போற்றி மதித்தனர். பரதநாட்டியம், வில்லுப்பாட்டு, கரகாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைகள் தொன்மையின் அடையாளமாகும். இன்றும் இக்கலைகள் சில பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன. இக்கலைகள் இன்றைய தலைமுறையினருக்கு பாரம்பரியத்தின் உணர்வை உணர்த்துகிறது. பழந்தமிழர்கள் இயற்கை வழிபாட்டையும் முன்னோர்கள் வழிபாட்டையும் பின்பற்றினர்.

**கலை**

கலை என்னும் சொல் பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். கலை என்பது பெயர்ச்சொல்லாக இருக்கும் பொழுது இசைக்கலை, நாடகக்கலை, ஆடற்கலை, சிற்பக்கலை என பலவகை கலைகளை குறிக்கும். கலை என்னும் சொல் வினையை குறிக்கும் பொழுது கலைத்துப் போடுதல் என்னும் பொருளில் வரும். நம் நாட்டில் கலைகள் பலவாகப் பெருகி சிறப்பு பெற்ற திகழ்கிறது.

**“ஆயக்கலைகள் அறுபத்துநான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை**
**தூய உருப்பளிங்கு போல்வாள்”.**

**(கம்பர் அருளிய சரசுவதி அந்தாதி - கடவுள் வாழ்த்து)**

ஆடற்கலையைக் கலையை கூத்துக்கலை என்றும் நாட்டிய கலை என்றும் கூறுவர் நாகரிகம் பெற்றமக்கள் முதல் நாகரிகம் பெறாத மக்கள் வரையிலும், குக்கிராமம் முதல் நகரம் வரையிலும் அனைத்து மக்களும் ஆடற்கலையைப் போற்றி வருகிறார்கள்.

**தொல்காப்பியத்தில் ஆடற்கலை**



Tamilmanam

ஆடற்கலையில் முக பாவங்கள் இன்றியமையாதவை ஆகும். மகிழ்ச்சி, துக்கம், கோபம், சிரிப்பு, அச்சம் முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது ஆடற் கலையின் சிறப்பான இயல்பாகும். இந்த உணர்வுகள் மெய்யின் கண் பட்டுத் தோன்றுவதால் மெய்ப்பாடு என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மெய்ப்பாடுகள் எட்டு வகை என்பதனை

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம்பெருமிதம்வெகுளிஉவகையென**
**அப்பால்எட்டேமெய்ப்பாடுஎன்ப"**

**(தொல்-மெய்ப்பாட்டியல்-நூற்பா-247)**

நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**சங்க காலத்தில் ஆடற்கலை**

சங்க காலத்தில் ஆடற் கலையில் வள்ளிக் கூத்தும் ஒருவகை ஆடற்கலையாகும். வள்ளிக் கூத்து பற்றி தொல்காப்பியர் புறத்திணையியலில் குறிப்பிடுகிறார்.

**"வாடா வள்ளி வயவர் ஏத்திய**
**ஓடா கழல் நிலை" (தொல்-பொருள் பா 63 ப 51).**

தொல்காப்பியர் குறிப்பிட்ட வள்ளிக் கூத்தினால் நாடுகளுக்கு வளங்கள் பல வந்து சேரும் என்று சங்க காலத்திலும் நம்பப்பட்டது. இதனை

**"வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்**
**நாடுபல கழிந்த பின்றை" (பெரும்பா 370 -371) ப 112**

என்று பெரும்பாணாற்றுப்படை நூல் கூறுகின்றது.

**பரிபாடலில் ஆடற்கலை**

இசைக்கலையும் ஆடற் கலையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. ஆடற்கலை கலைஞர் வாழ்ந்த பகுதியை "ஆடுவார்ச் சேரி" என்றும் இசை கலைஞர் வாழ்ந்த பகுதியை "பாடுவோர் பாக்கம்" என்றும் அழைத்தனர். இதனை,

**"பாடுவார் பாக்கம் கொண்டென**
**ஆடுவார் சேரியடைந் தெனப்" (பரிபா 31 -32) ப 170)**

**"சங்ககாலம் கூறும் ஆடல் கலைஞர்கள் மாமனர்களால் போற்றி பாதுகாக்கப்பட்டனர் என்பது வரலாறு. மன்னர்களின் பெருமைகளை ஆடல் பாடல்கள் மூலம் குடிமக்களிடம் கொண்டு சென்றனர் பின்னர் அரசவையில் ஆடல் நிகழ்த்தப்பட்டு தலைக்கோல் பட்டம் பெற்ற கலை நடனகலைஞர்கள் இறந்தமையை பல இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது" (ஆனந்திக. ய. ப -933)**

என்று பரிபாடல் நூல் குறிப்பிடுகிறது. அக்காலத்தில் இக்கலைகள் வளமுற்று இருந்தன. ஒரு பக்கம் இசைப்பாடும் பாணர்களின் குடியிருப்பாகிய பாக்கத்தை வெள்ளம் சூழ்ந்து கவர்ந்து கொண்டது என்று

பேரொலி எழுப்பினர். ஒரு பக்கம் ஆடும் கூத்தர்கள் குடியிருந்த சேரியை வெள்ளம் சுற்றிச் சூழ்ந்தது என்று கூச்சலிட்டனர்.

**திருவிழாக்கள்**

தொல் பழங்காலத்தில் மக்கள் சிறுசிறு குடில்கள் அமைத்து வாழ்ந்த போதும் விழாக்கள் நடைபெற்றிருக்க வேண்டும். அது பற்றிய செய்திகள் தொல் பழங்கால ஓவியங்களில் சில காட்சிகள் வரைய பெற்றுள்ளன.

சங்க காலத்தில் பல விழாக்கள் நடைபெற்றன. விழா என்னும் சொல்லிற்கு விழித்திருந்து பார்த்தல் விழா என்று பெயர் பெற்றது என்று கூறலாம். அதுவும் பெரும்பாலும் நிறைமதி நாளில் அது நடந்தது.

**“மூதூர் விழாவின் றாயினும் துஞ்சாதாகும்” (அக பா122) ப 10)**

**“விழாக்கள் என்பது ஒற்றுமை, இன்பம், மகிழ்ச்சி, விருந்தோம்பல், சுற்றம் பேணல், பகுத்துண்ணல், பண்பாட்டின் அடையாளம், தமிழர்களின் கலாச்சாரம் என்ற பல விழுமியங்கள் அமைவதற்கு காரணமாக இருக்கின்றன. எனவே விழாக்கள் என்பது சமய விழுமியமாகவே அமைகிறது”. (க.ஞானஜோதி. ப -81)**

என்று இப்பாடல் கூறுவதன் மூலம் விழா நேரத்தில் மக்கள் உறங்காமல் இருந்தனர் என்பது புலப்படுகின்றது.

இன்றைய நாகரிக உலகில் மக்கள் விழாக்களை பெருமளவில் கொண்டாடுவது இல்லை. பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு மக்கள் தங்கள் உறவினர்களுக்கு புலனம், குறுஞ்செய்தி வாயிலாக தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

**தைந்நீராடல்விழா**

தை மாதத்தில் வையையில் ஓடும் நீருக்கு “தைந்நீர் “என்று பெயர். அத்தைந்நீரில் ஆடுவதற்கு, “தைந் நீராடல் “என்பர். அத்தைந்நீராடலின் போது மகளிர் தம் விருப்பங்களை வையை வெள்ளத்திடம் எடுத்துக் கூறும் வழக்கம் இருந்தது. தை நீராடிய மகளிருள் சிலர் இதனை

**“கிழவர் கிழவியர் என்னாது ஏழ்காறும்**
**மழவீன்று மல்லல்கேள் மன்னுக என் மாரும்” (பரி 120 -121) ப 128)**

‘கிழவர் கிழவியர் ‘என்று எம்மை எவரும் பழித்து கூறாதபடி ஏழாம் பருவத்தின் எல்லையினும் யாம் இவ்விளமையினையே பெற்றேமாய் செல்வமும் சுற்றமும் பொருந்த வாழ்வதற்கு அருள்வாயாக என வேண்டுவார் சிலர்.

**ஆடை அணிகலன்கள்**

உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றும், இன்றியமையாதவையாக அமைகின்றன. இது மக்களின் வாழ்க்கை முறையினையும், பழக்க வழக்கத்தினையும் காட்டுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் மக்கள் எந்த மாதிரியான ஆடைகளை அணிந்திருந்தனர் என்று அக்காலத்தில் தோன்றிய இலக்கிய

நூல்கள், ஓவியங்கள், சிற்பங்கள் வாயிலாக காணலாம்." **ஆடை இல்லா மனிதன் அரை மனிதன்"** என்னும் பழமொழிக்கு ஏற்ப ஆடையின் தேவையை உணர்த்துகின்றது.

அணிகலன்கள் சமுதாயத்தில் அவரவர் குடும்ப நிலையை அறிவதற்கும், மதிப்பிடுவதற்கும் ஒரு அளவுகோலாக விளங்கியது. அணிகலன்கள் மக்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் காட்டுகின்றன. இதனை பரிபாடலில்

**"புகை பூஅவி ஆராதனை அழல் பல ஏத்தி**
**நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்**
**வகை சாலும் வையை வரவு" (பரி 11 -13) ப 133)**

வையை ஆற்றில் புதுப்புனல் வெள்ளத்தில் நீராட விரும்பிய மகளிர் தம் கூந்தலை உணர்த்துவதற்கு வேண்டி அகில் கட்டைகள் முதலான புகைசெய்வதற்குரிய ஆவிப் பொருட்கள் நெருப்பு ஆகியவற்றையும் ஏனைய பொருட்களையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சி பொருந்திய தம் கணவரை வையை நீராட்டு விழா நாளுக்குரிய ஆடை அணிகலன்களை அணிய செய்கின்ற முறை அங்கு மிகுதியாக காணப்படுகிறது.

இன்றைய புதுமண தம்பதிகள் ஆடிப்பெருக்கு அன்று தங்களது மணமாலை மற்றும் புதுப்பானைகளை ஆற்றிலே விட்டுவிட்டு தூய்மையாக நீராடி புது தாலியினை கட்டிக்கொண்டு புதிய ஆடைகளை அணிந்து வருவார் என்ற பழக்க வழக்கம் இன்றளவும் காணப்படுகிறது.

**சிறப்பு விழாக்கள்**

**இந்திர விழா**

இந்திர விழா பற்றி சங்க இலக்கியங்களில் ஒரேயொரு குறிப்பு காணப்படுகின்றன. ஐங்குறுநூற்றில் மருதத்தினை 62 ஆம் பாடலில் இவ்விழா பற்றிய குறிப்பு உண்டு.

சிலப்பதிகாரத்திலும் இந்திர விழா ஊரெடுத்த காதை முழுவதும் இந்திர விழா பற்றி கூறுகிறது இவ்விழா சித்ரா பௌர்ணமி அன்று தொடங்கும்.

**தைப்பூசம்**

தைப்பூசம் தை திங்களில் முழு நிலவன்று கொண்டாடப்படும் விழாவாகும். இவ்விழா தமிழகம் எங்கும் கொண்டாடப்படுகின்றது. முருகன் கோயிலிலும் சிவன் கோவில்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப் பெறுகின்றது.

**பொங்கல் விழா**

தமிழர்களின் திருநாளாக பொங்கல் விழா கொண்டாடப்படுகின்றது இந்த விழாவானது தை நீராடல் எருது வணக்கம் வேளாண்விழா சூரிய வழிபாடு ஆகியவற்றை உள்ளடக்கி நிற்கின்றது

**நடுகல் வழிபாடு மற்றும் கன்னிவழிபாடு**

தொல்பழங்கால முதல் இன்று வரையும் வழிபடும் வழிபாடு நடுகல் வழிபாடும், கன்னிவழிபாடும் ஆகும். நடுகல் வழிபாடு பற்றி சங்க இலக்கியத்திலிருந்து தற்காலம் வரையிலும் நடைமுறையில் உள்ளது. தற்காலத்தில் நடைபெறும் நடுகல் வழிபாட்டில் ஆட்டு பலியும் கள்படைத்தலும் உண்டு.

**தொகுப்புரை.**

தமிழர்களின் வரலாறு உலகின் மிக தொன்மையான கலாச்சாரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. சங்ககால தமிழர்கள் இயற்கை வளங்களோடு இணைந்த வாழ்க்கையை நடத்தியவர்கள். அவர்களின் வாழ்வியல் முறைகள், மரபுகள், பண்பாடு, குடும்ப அமைப்பு, உணவு முறைகள், கலை, கலாச்சாரம், விழாக்கள், விருந்தோம்பல், நிலத்தோடு உள்ள நெருக்கம், தொழில் மரபுகள் போன்றவை முக்கிய இடம் பெற்றிருந்தன.

இன்றைய பார்வையில் தொன்மக்கால மக்களின் பழமை வாய்ந்த பழக்க வழக்கங்கள் பலவற்றை நாம் மறந்து விட்டோமோ என்ற கேள்வி எழுகிறது. ஆனால் அவை சில பிம்பங்களாக மட்டுமே நம் வாழ்வில் உள்ளன. இன்றைய நவீன வாழ்க்கையில் உள்ள சிக்கல்கள், தன்னலம் சார்ந்த அணுகு முறைகள் பல அதிகரித்துள்ளன. அப்போது இருந்த சமூக ஒற்றுமை இன்று பெருமளவில் இல்லை. ஆயினும் அக்கால பழக்க வழக்கங்களில் இருந்த ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரம், உணவு, மரியாதை போன்ற அம்சங்களை மீண்டும் நினைவு கூர்ந்தால் இன்றைய நவீன சமூக தலைமுறையினருக்கு மனநலம் உடல்நலம் ஒழுக்க முறையும் வளர வாய்ப்புள்ளது.

**முடிவுரை**

தொன்மகாலத் தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த ஒழுக்க நெறிகள் ,கலாச்சார மரபுகள் ஆகியவை இன்று கூட மதிப்புடன் பேசப்படுகின்றன. அவர்கள் கடைப்பிடித்த அறம் சார்ந்த வாழ்க்கை சமூக ஒற்றுமை ஆகியவை பண்பாட்டு மரபுகளின் பிரதிபலிப்பாக திகழ்கின்றன

இன்றைய காலகட்டத்தில் நாகரிகம் தொழில்நுட்பம் மற்றும் உலகமயமாக்கல் வளர்ச்சியினால் வாழ்வியல் நிலை மாறி இருந்தாலும் அந்த அறநெறி முறைகள் நமக்கு வழிகாட்டும் ஒளியாக விளங்குகின்றன. இன்று நாம் அவர்கள் கடைப்பிடித்த பழக்க வழக்கம் பண்பாடு அறவழி இயற்கை மரியாதை போன்றவை இன்றைய நவீன சமூகத்திற்கு முக்கிய பாடமாகும்

தொன்மகால தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகள் நம்முடைய இன்றைய வாழ்க்கை முறைக்கு ஒரு பாரம்பரிய கண்ணோட்டத்தையும் பண்பாட்டையும் சமூக ஒழுக்க நெறிகளையும் வழங்குகின்றன. இவை வெறும் வரலாற்றுப் பதிவுகள் அல்ல நவீன வாழ்வின் நெறி, சமூக ஒற்றுமை மற்றும் பண்பாடு அடையாளத்தின் வழிகாட்டியாக இன்றைய தலைமுறையினர் எடுத்துக் கொள்ள வேண்டும். அவை நம் தமிழ்ச் சமூகத்தின் பெருமைக்கும் நற்பெருக்கத்திற்கும் அடித்தளமாகும்.

**குறிப்புகள்**

1. முனைவர் ச.திருஞானசம்பந்தம் தொல்காப்பியம், செய்யுளியலாதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம் 93 தெற்கு வீதி திருவையாறு 613204.

2. ஆனந்தி. க.ய. “சங்ககால நடனத்தின் வழி தோன்றலில் நாட்டுப் புறவியலில் ஆடற்கலைகள்“, தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்விதழ், தொகுதி- 2, எண்-01, 2025.
3. முனைவர் ச.ஆதிநாராயணசாமி “அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடும் பழக்க வழக்கங்களும்”, புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி- 2, எண்-04, 2022.
4. இரா.அறவேந்தன் பெரும்பாணாற்றுப்படை உரை வேறுபாடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிலிட். 41 பே சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை 600. 050
5. முனைவர் தட்சிணாமூர்த்தி. பரிபாடல் மூலமும் உரையும் நீயும் செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட். 41 பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை 600 098
6. அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை. புறநானூறு மூலமும் உரையும் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்லிட், 522,டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை சென்னை 18
7. க.ஞானஜோதி. “தமிழர்களின் விழாக்கள்” ,MJSSH இணையவழி ஆய்விதழ், தொகுதி- 5,எண்-3,2021
8. புலியூர்க்கேசிகன் அகநானூறு மூலமும் உரையும் அஸ்வின் ஏஜென்சி 7 ஓல்டு நம்பர் 67 அஷ்டலட்சுமி நகர் ஒன்பதாவது தெரு ஆலப்பாக்கம் சென்னை 600 116
9. புலியூர்க்கேசிகன் பரிபாடல் மூலமும் தெளிவுரையும் ஜீவா பதிப்பகம் 21 அப்துல்லா ஷாகிப் இரண்டாவது தெரு சேப்பாக்கம் சென்னை 600005.
10. வை.மு. சடகோபாராமனுஜச்சாரியரும், சே. கிருஷ்மாச்சாரியாரும், கம்பநாட்டாழ்வார் அருளியற்றிய சரஸ்வதியந்தாதி, கணேச அச்சுக்கூடம், சென்னை.
11. முனைவர் பே. சுப்ரமணியன் பரிபாடல் மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் 41 பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை. 600. 098
12. முனைவர் ச.திருஞானசம்பந்தம் தொல்காப்பியம் பொருள் அதிகாரம் மூலமும் உரையும் கதிர் பதிப்பகம் 93 தெற்கு வீதி திருவையாறு 613 204
13. ச. திருஞானசம்பந்தம் தொல்காப்பியம் பொருள் மெய்ப்பாட்டியல் கதிர் பதிப்பகம் 93 தெற்கு வீதி திருவையாறு 613204


**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.